நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்

முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்

2026 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண் 387/2022

*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக:– காவல் ஆய்வாளர், சாத்தூர் நகர் காவல் நிலையம். (குற்ற எண்.289/2022) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.தடகப்பன் என்ற தாடகப்பன்,<br>த/பெ.திரு.கனகராஜ்,<br>PU EN 1 – 965. கீழ் பூனாட்சி,<br>அப்பர் ஆழியாறு,<br>வால்பாறை,<br>கோயம்புத்தூர். |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 19.07.2022 |
| 8. | புகார் தேதி (Complaint) | 19.07.2022 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 21.07.2022 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 21.07.2022 |
| 11. | Commitment | – |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 06.04.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 03.06.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றங்களுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் கால தாமதம் |

இவ்வழக்கானது என் முன்பு 03.06.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சுதாகர், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:19:41 +0530

<u>தீர்ப்புரை</u>

1. <u>குற்றச்சாட்டு</u> :–

19.07.2022ம் தேதி மதியம் 02.45 மணிக்கு இவ்வழக்கில் புகார்தாரரும் இறந்து போனவரும் மான கருப்பசாமி என்பவர் அவரது மச்சான் முத்துச்செல்வம் என்பவருடன் வேலைப் பார்க்கும் இடத்துக்கு செல்ல வேண்டி சாத்தூர் வெள்ளைக்கரை ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து வந்து சாத்தூர் பைப்பாஸ் SSS காம்பளக்ஸ் எதிரே விருதுநகர் – கோவில்பட்டி கிழக்குபுற தேசிய நெடுஞ்சாலையில் ரோட்டை கடந்து செல்ல வேண்டி கிழக்கு ஓரமாக புகார்தாரரும் அவரது மச்சான் முத்துச்செல்வமும் முன்னு பின்னுமாக நின்ற கொண்டிருந்த போது அதே கிழக்கு புற தேசிய நெடுஞ்சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த எதிரியான தாடகப்பன் என்பவர் முருகேசன் என்பவரின் பெயரில் உள்ள TN 24 W 0003 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி ஆல்டோ காரினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் கிழக்கு ஓரமாக நின்ற புகார்தாரர் கருப்பசாமி மீது மோதியதில் பலத்த காயம்பட்ட கருப்பசாமி என்பவர் சாத்தூர் அரசு மருத்துவமனையிலும் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்தவர் 31.07.2022ம் தேதி அதிகாலை 10 மணிக்கு அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களினாலும் அதனால் ஏற்பட்ட பாதிப்பினாலும் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துள்ள இறப்பிற்கு காரணமான குற்றத்தை புரிந்துள்ளார் என்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

3. <u>கு.வி.மு.ச பிரிவு 251 ன் கீழ் விசாரணை</u> :–

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் இ.த.ச.பிரிவுகள் 279, 304A கீழான குற்றங்கள் இரண்டு ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை விதிக்கத்தக்கதாகும். எனவே, எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அந்த குற்றங்களின் சாராம்சத்தை அவர் விளக்கி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

பட்டியல் சாட்சிகளில் இருந்து 4 நபர்களும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:19:54 +0530

திரு.பிரைட் ஐசக் சுவாமிநாதன் அ.சா.1 முதல் அ.சா.5 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–

**5.1.** இவ்வழக்கின் விபத்தில் மரணமடைந்த கருப்பசாமி என்பவர், சாத்தூர் நான்கு வழிச்சாலையில் அமைந்துள்ள 'ஸ்ரீராம் சித்தாஞ்சல்' உணவகத்தில் கூலி வேலை செய்து வந்தார். சம்பவ தினமான 19.07.2022 அன்று மாலை நேரத்தில், கருப்பசாமி தனது மைத்துனரான அ.சா.1 – முத்துச்செல்வம் என்பவருடன் தான் வேலை செய்யும் உணவகத்திற்குச் செல்வதற்காக, சாத்தூர் – வெள்ளக்கரை சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து வந்துள்ளார். பின்னர், எஸ்.எஸ்.எஸ். காம்ப்ளக்ஸ் எதிரே விருதுநகர் – கோவில்பட்டி கிழக்குப்புற தேசிய நெடுஞ்சாலையைக் கடப்பதற்காகச் சாலையின் கிழக்கு ஓரத்தில் நின்று கொண்டிருந்தார்.

**5.2.** அப்போது, எதிரியான தாடகப்பன் என்பவர் **TN 24 W 0003** என்ற பதிவு எண் கொண்ட மாருதி சுசுகி ஆல்டோ காரை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, சாலையின் கிழக்கு ஓரத்தில் நின்று கொண்டிருந்த கருப்பசாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இவ்விபத்தினால் கீழே விழுந்த கருப்பசாமிக்கு இடது கால் பெருவிரல் அருகே சிராய்ப்பு காயம், வலது தோள்பட்டையில் வீக்கம், முதுகில் சிராய்ப்பு காயம், வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயம், வலது காதில் சிராய்ப்பு காயம் மற்றும் வலது காதின் கீழே இரத்தக் காயம் ஆகியவை ஏற்பட்டன.

**5.3.** சம்பவ இடத்தில் இருந்த மைத்துனர் அ.சா.1 – முத்துச்செல்வம் மற்றும் பிற நபர்களின் உதவியுடன், காயமடைந்த கருப்பசாமி தனியார் அவசர ஊர்தி மூலம் சாத்தூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, வழக்கு சம்பந்தமாக விசாரிக்க வந்த தலைமை காவலர் வெள்ளைத்துரை பாண்டியனிடம் 19.07.2022 அன்று பிற்பகல் 15:40 மணியளவில் தனது புகார் வாக்குமூலத்தை (அ.சா.ஆ.3) அளித்தார். அதன் அடிப்படையில், சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் குற்ற எண்: 289/2022–இன் கீழ் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 337 ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) முறைப்படி பதிவு செய்யப்பட்டது.

**5.4.** வழக்கை முதற்கட்ட புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் பாண்டியன், அன்றைய தினம் மாலை 17:30 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் அ.சா.3 – கார்த்திக் மற்றும் அ.சா.4 – கருத்தபாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் (அ.சா.ஆ.5)



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:19:59 +0530

மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) ஆகியவற்றைத் தயார் செய்தார். மேலும், சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை முறைப்படி பதிவு செய்தார்.

**5.5.** இந்நிலையில், மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட காயமுற்ற கருப்பசாமி, அங்கு சிகிச்சை பலனின்றி **31.07.2022** அன்று உயிரிழந்தார். கருப்பசாமி உயிரிழந்த காரணத்தினால், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304(A) ஆக மாற்றம் செய்யப்பட்டு, அதற்கான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

**5.6.** வழக்கின் மேல் விசாரணையை எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி, மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்குச் உடல் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை (Inquest) (அ.சா.ஆ.8) நடத்தி அறிக்கை தயார் செய்தார். பின்னர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தார். மேலும், விபத்துக்குள்ளான TN 24 W 0003 என்ற பதிவு எண் கொண்ட மாருதி சுசுகி ஆல்டோ காரை மோட்டார் வாகன ஆய்வாளரின் சோதனைக்கு அனுப்பி வைத்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் தனது ஆய்வறிக்கையில் (அ.சா.ஆ.9), இவ்விபத்து வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்றளித்தார்.

**5.7.** தொடர்ந்து புலன் விசாரணையை மேற்கொண்ட காவல் ஆய்வாளர், கருப்பசாமிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அருண், பாண்டியன் மற்றும் சேது, கண்ணன் ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைத் தனித்தனியாகப் பதிவு செய்தார். மேலும், கருப்பசாமியின் சடலத்தை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் தேவி பியான்சா என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய உடற்கூறாய்வு அறிக்கையைக் (அ.சா.ஆ.12) கோப்பில் சேர்த்து அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். புலன் விசாரணையின் முடிவில், எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 347 (304A) ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6.** <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> **:–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**7.** <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> **:–**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:20:04 +0530

**8.** <u>சாட்சியங்கள் மதிப்பீடு :–</u>

**8.1.** இவ்வழக்கில் புகார்தாரரும் காயம் பட்ட நபருமான கருப்பசாமி, வழக்கு புலன் விசாரணையின் போதே இறந்துவிட்டதால், அவர் தமக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் விபத்து குறித்து அளித்த புகார் வாக்குமூலமானது (அ.சா.ஆ.3) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 32(1)–இன் கீழ் மரண வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளத்தக்கது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும், ஒரு மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரிக்குத் தண்டனை வழங்கிவிட முடியாது என்றும், அதனை உறுதிப்படுத்தும் வகையில் பிற நம்பகமான சாட்சியங்கள் இருக்க வேண்டும் என்பதும் சட்ட விதியாகும்.

**8.2.** விபத்து நடந்தபோது சம்பவ இடத்தில் தன்னுடனே தனது மைத்துனர் அ.சா.1 – முத்துச்செல்வம் இருந்தார் என்று இறந்த கருப்பசாமி தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், நீதிமன்றத்தில் அரசு தரப்பு முதல் சாட்சியாக (PW–1) விசாரிக்கப்பட்ட மைத்துனர் முத்துச்செல்வம், தான் சம்பவத்தன்று வெங்கடாசலபுரத்தில் உள்ள குச்சி நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, காவல்துறை அதிகாரிகள் தன்னை மருத்துவமனைக்கு அழைத்ததாகக் கூறியுள்ளார். தான் மருத்துவமனை சென்றபோதுதான் கருப்பசாமி விபத்தில் காயமடைந்ததை அறிந்ததாகவும், கருப்பசாமி சாலையைக் கடந்தபோது விபத்து நேரிட்டதாகத் தன்னிடம் கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார். எந்த வாகனம் மோதியது என்பது தனக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, அ.சா.1 – முத்துச்செல்வம் விபத்தை நேரில் பார்த்த சாட்சி அல்ல என்பது தெளிவாகிறது.

**8.3.** சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் குறிப்பிடப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.2 – கருப்பசாமி, விபத்தில் இறந்தவர் வேலை செய்த உணவகத்தின் உரிமையாளர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில், சம்பவத்தன்று மதியம் கருப்பசாமி வேலை முடிந்து சென்ற பிறகு விபத்து நேரிட்டதாகத் தனக்குத் தகவல் கிடைத்ததாகவும், மருத்துவமனையில் கருப்பசாமி வலியால் துடித்துக் கொண்டிருந்ததை மட்டுமே தான் பார்த்ததாகவும் கூறியுள்ளார். விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பதைத் தான் நேரில் பார்க்கவில்லை என்று அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால், அரசு தரப்பு காட்டிய இவ்விரு முக்கிய சாட்சிகளும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் அல்ல என்பது உறுதியாகிறது.

**8.4.** மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகள் இருவரும் தங்களது முந்தைய போலீஸ் வாக்குமூலத்திலிருந்து முற்றிலும் முரண்பட்டுச் சாட்சியமளித்ததால், அரசு தரப்பில் அவர்கள் இருவரும் பிறழ் சாட்சிகளாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். எனினும், எதிரியைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் பொய் சாட்சி சொல்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பால் அவர்களிடம் இருந்து எவ்வித சாதகமான உண்மைகளையும் குறுக்கு விசாரணையின் போது வெளிக்கொணர இயலவில்லை.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:20:07 +0530

**8.5.** மேலும், சம்பவ இடத்தின் தன்மை மற்றும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த வேண்டிய பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்ட இரண்டு நபர்களும் அரசு தரப்பு வழக்குக்கு முற்றிலும் முரணாகவே சாட்சியமளித்துள்ளனர். அவர்களையும் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக்கிக் குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அரசு தரப்பு வழக்குக்கு ஆதரவான எவ்வித தகவல்களும் பெறப்படவில்லை.

**8.6.** இதற்கிடையில், அலுவல் சார்ந்த ஆவணங்களான விபத்து பதிவேடு (அ.சா.ஆ.10), காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.11), பிரேத விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.8), உடற்கூறாய்வு அறிக்கை (அ.சா.ஆ.12), மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.9) ஆகியவற்றை ஆவணங்களாகக் குறியீடு செய்வதற்குத் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிரி தரப்பில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 294–இன் கீழ் அரசு தாக்கல் செய்த மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக, அது தொடர்பான இதர அரசு மற்றும் மருத்துவச் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டனர்.

**8.7.** தொடர்ந்து, புலன் விசாரணை தொடர்பான விபரங்களை கூடுதல் சாட்சியான சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.5 – பிரைட் ஐசக் சுவாமிநாதன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியத்தை மட்டுமே கொண்டு எதிரியின் குற்றத் தன்மையைத் தீர்மானிக்கவோ அல்லது அவரைத் தண்டிக்கவோ இயலாது.

**8.8.** ஏற்கனவே கூறியது போல், இறந்த கருப்பசாமி அளித்த புகாருக்கு முற்றிலும் முரணாக அவருடன் சம்பவ இடத்தில் இருந்ததாகக் கூறப்பட்ட அவருடைய மைத்துனர் PW–1–இன் சாட்சியம் அமைந்துள்ளது. நேரில் பார்த்த சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகள் அனைவரும் பிறழ்ந்துவிட்டதாலும், அரசு தரப்பு சமர்ப்பித்த ஆவணங்கள் எதிரிதான் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டதாலும், எதிரிக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9.** <u>முடிவு:–</u>

**9.1.** முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304A ஆகிய குற்றங்களுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** சொத்து பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 06.06.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.06 18:20:11 +0530

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:20:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
சாத்தூர்

<u>பிற்சேர்க்கை</u>

<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.முத்துச்செல்வம் |
| அ.சா.2 | திரு.கருப்பசாமி |
| அ.சா.3 | திரு.கார்த்திக் |
| அ.சா.4 | திரு.கருத்தப்பாண்டி |
| அ.சா.5 | திரு.பிரைட் ஐசக் சுவாமிநாதன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2.** <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.07.2022 | புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 19.07.2022 | பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் |
| அ.சா.ஆ.2A | 19.07.2022 | பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 19.07.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 19.07.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 19.07.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 19.07.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 31.07.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ 8 | 31.07.2022 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 22.07.2022 | TN 24 W 0003 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுகி ஆல்டோ வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.10 | 19.07.2022 | சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அருண் வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 19.07.2022 | விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் வழங்கிய காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | 31.07.2022 | பிரேத பரிசோதனை |

<u>3. அரசு தரப்பு சான்று பொருள்</u> :– இல்லை

<u>4. எதிரி தரப்பு சாட்சிகள் :</u>– இல்லை

<u>5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u> :– இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.06 18:20:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

குறிப்பு :–

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.